# Vivardhana Microfinance Limited
# No.41/7, Raja Street, R A Puram
# Mandaveli, Chennai – 600 028.

## கடன் பெறுவோர் நெறிமுறைகள்

1. கடன் விண்ணப்பதாரர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.300000க்கு மிகாமல் இருக்க வேண்டும்
2. புதிய தவணை உட்பட மாதாந்திர தவணை EMI ரூ.12500க்கு கிராமப்புறங்களுக்கும் மற்றும் நகர்ப்புறங்களுக்கு Rs.11000 க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. பரிசீலனை கட்டணம் கடன் தொகையிலிருந்து 1% மற்றும் காப்பீடு கட்டணம் செலுத்த வேண்டும்
4. காலாவதியான கடன் தொகை வேற எந்த கடன் வழங்கும் நிறுவனத்திடமும் இருக்க கூடாது
5. ஒப்புதலுக்குப் பிறகு கடன் தொகை வங்கி a/c மூலமே வழங்கப்படும்
6. விண்ணப்பதாரருக்கு கொடுக்கப்படும் கடன் தொகையின் பொறுப்பு விண்ணப்பத்தாரையே சாரும். கடன் தொகை வேறு யாருக்கும் பகிரவோ வழங்கவோ கூடாது.
7. கடன் அட்டை கொடுக்கப்படும் இல்லை என்றால் கேட்டு வாங்க வேண்டும்
8. தவணை தொகையை செலுத்தும் போது கடன் அட்டையில் வரவு வைத்து கொள்ள வேண்டும் தவறும் பட்சத்தில் கடன் வாங்கியவரே பொறுப்பு ஏற்க வேண்டும்
9. கடன் தொகையை வங்கி மூலமும் செலுத்தலாம்
10. கடன் தவணை தொகையை குறித்த தேதியில் செலுத்த வேண்டும் . தவறும் பட்சத்தில் வாரம் / மாதம் இறுதிக்குள் செலுத்த வேண்டும்.
11. இவ்வாறு முழு தவணைத் தொகையை செலுத்தி நிலுவையில் எந்த தொகையும் இல்லை என்றால் கடன் கணக்கு சீரான கணக்காக கருதப்படும்.
12. தவணைத் தொகையை முழுமையாக குறித்த தேதியில் கட்டவில்லை என்றால், அந்த தொகை நிலுவையில் வைக்கப்படும். தவணைத் தொகை கட்ட வேண்டிய நாளில் இருந்து தாமதமான நாட்கள் தொடர்ந்து கணக்கிடப்படும். இந்த தாமத நாட்களின் அடிப்படையில் அந்த கடன் கணக்கு, இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி, கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டியபடி சிறப்பு குறிப்பு கணக்காக (SMA) வகைப் படுத்தப்படும். மேலும் அட்டவணையை அடுத்து அதனை விளக்கும் எடுத்துக்காட்டுகளும் தரப்பட்டுள்ளன.

# Vivardhana Microfinance Limited
# No.41/7, Raja Street, R A Puram
# Mandaveli, Chennai – 600 028.

**அட்டவணை**

| SMA துணை வகைகள் | வகைப்பாட்டிற்கான அடிப்படை (நிலுவையில் உள்ள தவணை, அசல், அல்லது வட்டி செலுத்துவதில் காலதாமதமான நாட்கள்) |
|---|---|
| SMA-0 | 30 நாட்கள் வரை |
| SMA-1 | 30 நாட்களுக்கு மேல் மற்றும் 60 நாட்கள் வரை |
| SMA-2 | 60 நாட்களுக்கு மேல் மற்றும் 90 நாட்கள் வரை |

**கடன் கணக்கின் நிலுவைத் தேதி மற்றும் SMA, NPA**
**வகைப்பாடு குறித்த எடுத்துக்காட்டுகள்**

| விளக்கம் | வகைப்பாடு தொடக்க தேதி | வகைப்பாடு கடைசி தேதி | வகைப்பாடு விவரம் |
|---|---|---|---|
| **01-03-2024 அன்று செலுத்த வேண்டிய EMI முழுமையாக 01-03-2024 அன்றே செலுத்தப்பட்டது** | | | **சீரான கணக்கு** |
| 01-03-2024 அன்று செலுத்த வேண்டிய EMI, 01-03-2024 அன்று செலுத்தப்படவில்லை. தாமத நாட்களின் எண்ணிக்கை 01-03-2024 முதல் தொடங்கப்படும் | 01-03-2024 | 30-03-2024 | 01-03-2024 முதல் அடுத்த 30 நாட்களுக்கு **SMA-0,** முழு நிலுவைத் தொகையும் செலுத்தப்படாவிட்டால் |
| 01-03-2024 அன்று செலுத்த வேண்டிய EMI, ஆனால் 30-03-2024க்குப் பிறகும் செலுத்தப்படவில்லை. தாமத நாட்களின் எண்ணிக்கை 01-03-2024 முதல் தொடங்கப்படும் | 31-03-2024 | 29-04-2024 | 31-03-2024 முதல் அடுத்த 30 நாட்களுக்கு **SMA-1**, முழு நிலுவைத் தொகையும் செலுத்தப்படவில்லை என்றால் |
| 01-03-2024 அன்று செலுத்த வேண்டிய EMI, 29-03-2024க்குப் பிறகும் செலுத்தப்படவில்லை. தாமத நாட்களின் எண்ணிக்கை 01-03-2024 முதல் தொடங்கப்படும் | 30-04-2024 | 29-05-2024 | 30-04-2024 முதல் அடுத்த 30 நாட்களுக்கு **SMA-2**, முழு நிலுவைத் தொகையும் செலுத்தப்படாவிட்டால் |
| 01-03-2024 அன்று செலுத்த வேண்டிய EMI, 29-05-2024க்குப் பிறகும் செலுத்தப்படவில்லை. தாமத நாட்களின் எண்ணிக்கை 01-03-2024 முதல் தொடங்கப்படும் | 30-05-2024 | | **காலம் தவறிய கணக்கு** |

13. 90 நாட்களுக்கு மேல் தவணைக் தொகை தொடர்ந்து நிலுவையில் இருந்தால், அந்த கடன் காலம் தவறிய கணக்காக (NPA) வகைப் படுத்தப்படும். மேலும், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் .

14. கடன் கணக்கின் இந்த (SMA, NPA) வகைப் படுத்திய நிலை சிபில் (CIBIL) மற்றும் இதர கடன் பணியக (Credit Bureau) நிறுவனங்களுக்கும் மாதம் இருமுறை தெரிவிக்கப்படும்.